**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | நாடகமும் அரங்கியலும் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் உள்ள 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கான மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "சமயக் காரணங்கள் நாடக அம்சங்களை கொண்டுள்ளன இதில் இருந்து "மக்கள் அரங்கு" தோன்றி இருக்க வேண்டும் என்று கூறியவர்
1) தொம்சன் 2) றிட்ஜ்வே 3) ஜோன் ஹறீசன்
4) பேரா சிவத்தம்பி 5) பேரா சரச்சந்திரா ( )

02. சமஸ்கிருத மரபில் "லோகதர்மி" எனக்குறிப்பிடப்படுவது
1) குறியீட்டு நாடகம் 2) யதார்த்தபண்பு நாடகம் 3) சட்டத்துவமரபு
4) மோடி நாடகம் 5) அபத்த நாடகம் ( )

03. நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்படாத ரஸம்
1) சாந்தம் 2) பயம் 3) அன்பு 4) காதல் 5) வீரம் ( )

04. பரதமுனிவர் கூறும் "ரச" என்பதை அபிநவ குப்தர் எவ்வாறு குறிப்பிடுகிறார்.
1) கதாசிஸ் 2) யூஜின் 3) ரசவாதம்
4) மெய்ப்பாடு 5) உள் ஆழம் ( )

05. "கதாசிஸ்" என்பது
1) பாத்திரப்பண்பு 2) அவலத்தவறு 3) பெருங்காட்சி
4) உணர்ச்சி வெளிக்கொனர்கை 5) ஒரு நாடக வகை ( )

06. "தெஸ்பியன் வண்டில்" என்ற கலைச்சொல் குறிப்பது
1) தெஸ்பிஸ் இன் சிறப்புக்கள் 2) நடிப்புக்கொள்கைகள் 3) ரஜடியின் இலகணம்
4) அரங்கப்பொருட்கள் 5) அரங்க வரலாறு
( )

07. "டித்றாம்" பாடல்களை இலக்கயமாக தர முயர்த்தியவர்
1) சோபோகிளிஸ் 2) அரிஸ்ரோட்டில் 3) ஏரியன்
4) ரெறன்ஸ் 5) ஹோமர் ( )

08. சமஸ்கிருத நாடகத்தில் பரதர் பாத்திரங்களை எத்தனை வகையாகப் பாகுபடுத்தினார்
1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று 4) நான்கு 5) ஐந்து ( )

09. நாடகம் ஒன்றின் குரல், பாடல், சொல்லாடல் மூலம் கருத்தைப் புலப்படுத்துவது
1)ஆங்கிகம் 2) சாத்விகம் 3) வாச்சிகம்
4) ஆஹார்யம் 5) ஸ்தாயிபாவம்
( )

10. 'ட்றமணன்' (Dromnoan) என்ற கிரேக்க சொல்லின் கருத்து
1) நாடகம் 2) அரங்கு 3) நீகழ்த்தப்பட்டது
4) நிகழுமியம் 5) பார்க்கும் இடம் ( )

agaram.lk

11. கிரேக்க 'திறஜடி' நாடகங்களின் கொடுமுடி என்று அழைக்கப்பட்டவர்
1) ஏஸ்கிலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிடீஸ்
4) அரிஸ்ரோபென்ஸ் 5) மெனான்டர் ( )

12. கிரேக்க 'ரஜடி நாடக மரபில்' முக்கூட்டு நாடகப் பாரம்பரியத்தினை தோற்றுவித்தவர்
1) ஏஸ்கிலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிபீஸ்
4) அரிஸ்ரோபென்ஸ் 5) அகமெம்னன் ( )

13. 'உலகின் முதல் நடிகன்' என அழைக்கப்படுபவர்
1) தெஸ்பிஸ் 2) ஷேகஸ்டியர் 3) சோபோகிளிஸ்
4) பரதர் 5) சிவாஜி கணேசன் ( )

14. கிரோக்க அரங்கில் பயன்படுத்தப்பட்ட 'எக்கிக்குளோமா' (EKKYKLEMA) என்னும் அரங்கப் பொறியின் பயன்பாடு
1) காட்சி மாற்றம் 2) பாத்திர வரவு
3) இறந்த உடல் காவி 4) தெய்வங்களை கொண்டு வருதல்
5) ஒலி எழுப்புதல் ( )

15. சங்ககால அகம்சார் சடங்காக அமைவது
1) வேலன் வெறியாட்டு 2) துணங்கை 3) களவேள்வி
4) முன்தோர்க்குரவை 5) பின்தேர்க்குரவை ( )

16. பின்வருவனவற்றுள் நடிகரின் கற்பனை பற்றிய மிகச் சரியான கூற்று எது
1) காரண காரியத்தை கொண்டிராது
2) நம்பகத்தன்மையற்றது
3) காண்பிய படிமங்கள் நிறைந்தது
4) அறிவு ரீதியாக சிந்திப்பது
5) வெளிவாரியான படைப்பாக்கல் பணியாகும் ( )

17. வானொலி நாடகத்திற்கான மேடை
1) ஒலிப்பதிவு செய்யும் கலையகமாகும்
2) நடிகர்கள் நின்று நடிக்கும் இடமாகும்
3) காற்றுவெளி ஆகும்
4) கேட்போரின் மனமாகும்
5) நடிப்போரின் மனமாகும் ( )

18. நடிகர் நீண்ட வசனம் பேசுவதற்கு காற்றைச் சேமித்து வைக்க உதவும் பகுதி
1) உச்சந்தலையாகும் 2) நாசி ஆகும் 3) நெஞ்சு ஆகும்
4) தொண்டை ஆகும் 5) அடிவயிறு ஆகும் ( )

19. சங்ககாலத்தில் யாழ் என்னும் வாத்தியத்தை வாசித்த கூத்தர் குழாம்
1) கோடியர் 2) ஹலியர் 3) பொருநர் 4) பாணர் 5) வைரியர் ( )

20. பின்வருவனவற்றில் இலங்கையின் 'வடபுலத்தில்' மட்டும் ஆடப்படும் கூத்து மரபு
1) வடமோடி 2) காத்தவராஜன் 3) மகிடி
4) தென்மோடி 5) வசந்தன் ( )

21. பின்வரும் கூத்து மரபில் புலசந்தோர் எனும் பாத்திர வரவு இடம்பெறும் கூத்து மரபுக்குரிய பிரதேசம்
1) மன்னார் 2) மலையகம் 3) மட்டக்களப்பு
4) முல்லைத்தீவு 5) யாழ்ப்பாணம் ( )

agaram.lk

22. கூத்துக்களை 'பாங்கு' என்ற பெயரில் வகைப்படுத்தி வழங்கும் பிதேசம்
1) மட்டக்களப்பு 2) யாழ்ப்பாணம் 3) மலையகம்
4) வன்னி 5) மன்னார் ( )

23. மலையகத்தில் பொன்னர் சங்கர் கூத்து பெரும்பாலும் நடைபெறும் மாதங்களானவை
1) சித்திரை, வைகாசி 2) கார்த்திகை 3) மாசி, பங்குனி
4) பங்குனி, சித்திரை 5) தை, மாசி ( )

24. பின்வருவனவற்றுள் கூத்து முறையில் அமைந்த நாடகம்
1) உறவுகள் 2) சங்காரம் 3) கோடை
4) கண்டனன் சீதை 5) ஆர்கொலோசதுரர் ( )

25. உளவியல்சார் நாடகங்களைப் படைத்த கிரேக்க நாடகாசிரியர்
1) மெனான்டர் 2) ஈஸ்கிலஸ் 3) யூரிபிடிஸ்
4) அரிஸ்டோபன்ஸ் 5) சோபோகிளிஸ் ( )

26. ஈடிப்பஸ் நாடகத்தின் 'மோதுகை' எனக் கொள்ளப்படுவது
1) விதியின் கையில் ஆட்டுவிக்கும் அவலம்
2) அவலநாயகனின் மனித நிலைப்பட்ட துன்பம்
3) தனிமனிதனுக்கும் இறை நியதிக்கும் இடையிலான போராட்டம்
4) ஈடிப்பசுக்கும் தந்தைக்கும் இடையிலானன போராட்டம்
5) உயர் பீடத்தில் இருப்பவர் அழிக்கப்படுதல் ( )

27. சுமஸ்கிருத அரங்கில் பிரதான நடிப்பிடத்தைக் குறிக்கும் சொல்
1) ரங்க பீடை 2) ரங்கசீர்யம் 3) பூர்வரங்க
4) மத்தவராணி 5) நேபத்ய கிரகம் ( )

28. மிருச்சகடிக நாடகத்தின் ஆசிரியர்
1) பாசர் 2) ஸ்ரீஹர்சர் 3) பவபூதி
4) சூத்திரசுர் 5) காளிதாசர் ( )

29. இலங்கையின் பொட்டல் வெளியில் ஆடப்படும் கூத்து
1) காத்தான் கூத்து 2) வசந்தன் கூத்து 3) காமன் கூத்து
4) நாட்டைக் கூத்து 5) அருச்சுனன் தபசு ( )

30. திருவெம்பாவையுடன் தொடர்புடையதாக கருதப்படும் சங்ககால சடங்கு
1) குன்றக் குரவை 2) வேலன் வெறியாட்டு. 3) கள வேள்வி
4) தைநீராடல் 5) வேட்டுவ வரி ( )

31. சிலப்பதிகாரம் கூறும் அரங்கில் 'கரந்துவரல் எழினி' எனப்படும் திரை
1) ஒரு புறமிருந்து வருவதாகும்
2) இருபுறமும் இருந்து வந்து நடுவில் இணைவதாகும்
3) மேலிருந்து கீழே இறங்குவதாகும்
4) மேடையின் பின்புறம் இருந்துவருவது
5) நிரந்தரமாக தொங்கவிடப்படும் ( )

32. ஆச்சியர் குரவைக் கூத்தில் பாத்திரங்களின் எண்ணிக்கை
1) 5 2) 7 3) 6 4) 8 5) 9 ( )

33. மகேந்திரவர்மனால் எழுதப்பட்ட நாடகம்
1) பகவத அர்ஜ்ஜியம் 2) சாக்கைக்கூத்து 3) ஆரியக்கூத்து
4) பூம்புலியூர் நாடகம் 5) பக்த விலாசப் பிரகசனம் ( )

agaram.lk

34. சிலப்பதிகார காலத்திற்கு முன்னர் கூத்து ஆடிய பெண்களை

1) பாடினி என அழைத்தார்கள் 2) விறலியர் என அழைத்தனர்
3) பதியிலார் என அழைத்தனர் 4) தேவரடியர் என அழைத்தனர்
5) மாணிக்கத்தார் என அழைத்தனர் ( )

35. அரங்க காண்பிய மூலகங்களுள் **(அடங்காதது)**


1) நடிகர் 2) வேட உடை 3) ஒலி
4) மேடைப்பொருள் 5) ஒளியமைப்பு ( )

36. கூத்தில் இறுதியில் இடம் பெறுவது

1) ஆடி முடித்தல் 2) வணக்கம் உரைத்தல் 3) வாழி பாடுதல்
4) காப்புக் கூறுதல் 5) பாடி முடித்தல் ( )

❖ **பின்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களிற்கு விடை தருக**







அ ஆ இ ஈ உ

37. கிரேக்க அரங்கையும் ஆசிரியரையும் குறிக்கும் எழுத்து

1) அ, ஆ 2) ஆ, இ 3) இ, ஈ 4) ஈ, உ 5) இ, உ ( )

agaram.lk

38. படத்தில் காணப்படும் 'பா' நாடக ஆசிரியரை குறிக்கும் எழுத்து

1) அ, ஆ 2) ஆ, இ 3) ஆ, ஈ 4) அ, இ 5) ஆ, உ ( )

39. சடங்கு மூலகங்களில் இருந்து தமது நவீன நாடக முறைமையை வடிவமைத்தவர்கள்

1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

40. படத்தில் காணப்படும் அரங்கு.



1) களத்து மேடு
2) தானே அம்பல
3) கூத்தம்பலம்
4) யப்பான் அரங்கு
5) சீன அரங்கு

(1x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி 'A' இல் இருந்து இரண்டு வினாக்களையும் பிரிவு 'B' இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் 4 வினாக்களுக்கு விடை தருக?**

### பிரிவு A

01.

1) ஆற்றுகைக் கலை என்ற எண்ணக்கருவை விளக்குக. (3 புள்ளிகள்)

2) மேடை நாடகத்தினை வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் என்பவற்றோடு ஒப்பிடுக. (6 புள்ளிகள்)

3) நாடகக்கலையின் சிறப்பியல்புகள் நான்கைக் கூறி விளக்குக. (6 புள்ளிகள்)

02.

1) சமஸ்கிருத நாடகத்தின் கதைப்பின்னல், கட்டமைப்பு என்பவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

2) நாட்டிய சாஸ்திரம் கூறும் இரண்டு வகை நடிப்பு பாணிகள் பற்றி விளக்குக.

3) பரதரின் எட்டு ரசங்களையும் அதன் பாவங்களையும் பட்டியற்படுத்துக.

03. பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு

1) பலே 2) ஒபேறா 3) யதார்த்தபாணி 4) இசை நாடகம் 5) நடன நாடகம்

### பிரிவு B

04.

1) கோடை நாடகத்தின் பிரதான முரண்யாது? (2 புள்ளிகள்)

2) ஈழத்தில் தோன்றிய 'பா' நாடக ஆசிரியர் மூவர்? (3 புள்ளிகள்)

3) கோடை நாடக பாத்திரங்கள் மூன்றைக் கூறி அவற்றில் ஒன்றின் குணவியல்வை விபரிக்குக. (5 புள்ளிகள்)

agaram.lk

4) "கோடை" ஒரு சமூக வரலாற்று நாடகமாக நோக்கலாம் என்பர் இக்கூற்றை நிறுவுக. (5 புள்ளிகள்)

05.

1) கவிதையியல் எனும் நூலில் அரிஸ்ரோட்டில் முன்வைத்த அவல இலக்கண உறுப்புக்கள் ஆறும் எவை? (3 புள்ளிகள்)

2) அவைபற்றி விபரிக்குக (6 புள்ளிகள்)

3) அரிஸ்ரோட்டிலின் மூன்றன் ஒருங்கியைபு பற்றி விபரிக்குக. (6 புள்ளிகள்)

06. பின்வரும் நாடக ஆசிரியர்களுள் மூவரை பற்றி சிறுகுறிப்பு தருக

1) சோபோகிளிஸ்
2) குழந்தை ம.சண்முகலிங்கம்
3) மகாகவி உருத்திர மூர்த்தி
4) அரிஸ்ரோபன்ஸ்
5) மெனாண்டர்

(5x3=15 புள்ளிகள்)